**செய்தி வெளியீடு எண்: 807** **நாள்: 02.11.2018**

**செய்தி வெளியீடு**

**<u>புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் டாக்டர் V.சரோஜா அவர்களின் வேண்டுகோள்</u>**

பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு சத்தான உணவினை அளித்து, அவர்கள் கல்வியில் மேன்மை அடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட உன்னதத் திட்டத்தில் தற்பொழுது 43,205 சத்துணவு மையங்களில் 51.96 இலட்சம் மாணாக்கர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1991ல் இத்திட்டத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று பெயரிட்டு, பின்னர் 2013ஆம் ஆண்டில் மாணவ, மாணவியர் விரும்பி உண்ணும் 13 வகையான கலவை சாதம் போன்ற பல்சுவை உணவுகளை அறிமுகப்படுத்தி, இத்திட்டத்தை மேலும் சிறப்புற செயல்படுத்தினார்கள்.

31,493 சத்துணவு அமைப்பாளர்கள், 31,437 சமையலர்கள், 31,739 சமையல் உதவியாளர்கள் என மொத்தம் 97,669 பணியாளர்களைக் கொண்டு இத்திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. **சத்துணவு திட்டத்தினை செயல்படுத்துவதில் பணியாளர்களின் பங்கு இன்றியமையாதது என்பதை தமிழ்நாடு அரசு நன்கு உணர்ந்த காரணத்தினால் தான், அவர்களின் நலனை பேணுவதில் இந்தியாவிற்கே முன்னோடியாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. இதனை சத்துணவு பணியாளர்களும் நன்கு அறிவர்.**

தமிழ்நாட்டில் மட்டும் தான் ஒரு சத்துணவு மையத்திற்கு சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் என 3 பணியாளர்களும்,

சில மையங்களில் 4 பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். சத்துணவு அமைப்பாளர்கள் தேவைப்படும் உணவுப் பொருட்களை பாதுகாப்பாக இருப்பு வைப்பது, அன்றாடம் சமைப்பதற்கு காய்கறிகள் மற்றும் தாளிதப் பொருட்களை வாங்கி வழங்குவது, பொருட்களின் கணக்கை பராமரிப்பது ஆகிய பணிகளை செய்கின்றனர். சமையலர்கள் சமையல் வேலையையும், சமையல் உதவியாளர்கள் சமையலருக்கு உதவியாக பிற வேலைகளையும் செய்கின்றனர். **ஆனால், பெருவாரியான மாநிலங்களில் ஒரு மையத்தில் ஒரு பணியாளர் மட்டுமே பணிபுரிந்து வருகின்றார்.** ஒரு சில மாநிலங்களில், ஒரு மையத்தில் அதிகபட்சமாக 2 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் சத்துணவு பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் 3 சதவீதம் ஊதிய உயர்வுடன் சிறப்பு காலமுறை ஊதியம், வழங்கி வருவது மட்டுமல்லாமல், மத்திய அரசின் ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளையும் ஏற்று, சத்துணவுப் பணியாளர்களின் ஊதியத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கியுள்ளது :-

| பதவி | 7வது ஊதியக் குழுவிற்கு முன்பு ஊதிய விகிதம் | 7வது ஊதியக் குழுவிற்கு பின்பு ஊதிய விகிதம் |
|---|---|---|
| அமைப்பாளர் | ரூ.2500–5000 மற்றும் தர ஊதியம் ரூ.500/– | ரூ.7700–24200 |
| சமையலர் | ரூ.1300–3000 மற்றும் தர ஊதியம் ரூ.300 | ரூ.4100–12500 |
| சமையல் உதவியாளர் | ரூ.950–2000 மற்றும் தர ஊதியம் ரூ.200 | ரூ.3000–9000 |

அது மட்டுமன்றி, அவர்களுக்கு கீழ்கண்ட பல்வேறு சலுகைகளையும் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது :

- அகவிலைப் படி
- வீட்டு வாடகைப் படி
- நகர ஈட்டுப் படி
- மருத்துவப் படி
- பண்டிகை முன்பணம்
- பொங்கல் கருணைத் தொகை
- மலைவாழ் படி மற்றும் குளிர்காலப் படி
- சிறப்பு சேமநல நிதி
- கூடுதல் பொறுப்புப்படி
- பொது வருங்கால வைப்பு நிதி
- குடும்ப நல நிதி
- மகப்பேறு விடுப்பு
- விருப்ப ஓய்வு
- புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்
- கருணை அடிப்படையிலான பணி நியமனம் மற்றும்
- 12 நாட்கள் தற்செயல் விடுப்பு

அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி ஆகியவற்றை உள்ளடக்கி, இன்றைய தேதியில் பணியில் சேரும் ஒரு அமைப்பாளர் ரூ.10,353/—ம், சமையலர் ரூ.6,429/—ம், சமையல் உதவியாளர் ரூ.5,230/—ம் ஒரு மாத சம்பளமாக பெறுவர். ஏற்கனவே பணியில் உள்ள பணியாளர்கள் தாங்கள் பணி செய்த காலத்திற்கேற்ப இதைவிட அதிக ஊதியம் பெற்று வருகின்றனர்.

பிற மாநிலங்களில் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஊதியம் பின்வருமாறு:

| **மாநிலம்** | **வழங்கப்படும் ஊதியம்** | |
|---|---|---|
| | சமையல் உதவியாளர் | சமையலர் |
| கேரளா | தினக்கூலி ரூ. 450/— முதல் ரூ.475/— வரை | பணியிடம் இல்லை |
| கர்நாடகா | ரூ. 2600/— மாதம் | ரூ.2,700/— |
| ஆந்திரா | தினக்கூலி ரூ.350/— | பணியிடம் இல்லை |
| தெலுங்கானா | ரூ.2000/— மாதம் | பணியிடம் இல்லை |
| குஜராத் | ரூ.1600/— மாதம் | பணியிடம் இல்லை |
| உத்திரபிரதேசம் | ரூ. 1000/— மாதம் | பணியிடம் இல்லை |
| மேற்கு வங்காளம் | ரூ. 1500/— மாதம் | பணியிடம் இல்லை |
| ஒரிசா | ரூ. 1400/— மாதம் | பணியிடம் இல்லை |

**தமிழ்நாட்டில் மட்டும் தான் சத்துணவு அமைப்பாளர் என்ற பணியிடம் உள்ளது. ஆனால், பிற மாநிலங்களில் சத்துணவு அமைப்பாளர் என்ற பணியிடமே இல்லை.**

அது மட்டுமன்றி, ஓய்வு பெற்ற 54,340 சத்துணவுப் பணியாளர்களுக்கும் 1.10.2017முதல்

- **மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஓய்வூதியம் ரூ.1,500/–லிருந்து ரூ.2000/– ஆகவும்,**
- **ஓய்வுபெறும் போது வழங்கப்பட்டு வந்த ஒட்டுமொத்தத் தொகை, அமைப்பாளர்களுக்கு ரூ.60,000/–லிருந்து ஒரு லட்சம் ரூபாயாகவும்,**
- **சமையலர் (ம) சமையல் உதவியாளர்களுக்கு ரூ.25,000/–லிருந்து ரூ.50,000/– ஆகவும் மாண்புமிகு அம்மாவின் அரசு உயர்த்தியுள்ளது.**

2017–18ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு அட்டவணையில் உள்ளவாறு நிதி வழங்கி செலவினங்கள் மேற்கொண்டுள்ளது:-

| வ. எண். | விவரம் | நிதி செலவினம் (ரூ.கோடியில்) | விழுக்காடு |
|---|---|---|---|
| 1 | நிர்வாக செலவு | 949.76 | 58% |
| 2 | குழந்தைகளுக்கு வழங்கும் உணவு செலவு | 674.48 | 42% |
| | மொத்தம் | 1624.24 | 100% |

**இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஒதுக்கிய 1,624.24 கோடி ரூபாயில் சத்துணவு பணியாளர்களின் ஊதியம் மற்ற படிகள் உள்ளிட்ட நிர்வாக செலவுகளுக்காக 58 சதவீதம் வழங்கி வருகிறது. மாணாக்கர்களின் உணவுக்காக 42 சதவீதம் செலவு செய்யப்படுகிறது.**

எனவே, 51.96 இலட்சம் மாணாக்கர்களின் பசியினை போக்கும் இத்திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்தி வரும் சத்துணவுப் பணியாளர்களின் நலனைப் பேணிக் காக்க தமிழ்நாடு அரசு தற்போது வழங்கி வரும் பல்வேறு சலுகைகளை கருத்தில் கொண்டும், சத்துணவு பணியாளர்களுக்கு 7வது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி ஊதிய விகிதத்தினை மாற்றி அமைத்திருப்பதைக் கருத்தில் கொண்டும், சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் லட்சக்கணக்கான குழந்தைகளின் நலனைக்

கருத்தில் கொண்டும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் தங்களது போராட்டத்தை கைவிட்டு உடனடியாக பணிக்கு திரும்ப வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**சமூக நலம் மற்றும்**
**சத்துணவு திட்டத் துறை அமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**